(ஆ) மற்றும் (இ) பாலம் கட்டும் பணியினை தாமதப்படுத்தியதால் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு, ஒப்பந்தக்காரர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு 18—6—1981-க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே மீதமுள்ள பணிகளை சிறு பணி ஒப்பந்தக் காரர்கள் மூலம் துறை வாயிலாகவே முடித்து விட தீர்மானிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஆர். சக்கரபாணி: மாண்புமிகு தலைவரவர்களே, அரசே எடுத்து நடத்தும் என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்காக மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது எப்பொழுது முடிக்கப்படும் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒப்பந்தக்காரர் வழக்குமன்றத்திற்குச் சென்றிருக்கிறார். 18—6—1981-க்கு அந்த வழக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. ஆனாலும் சிறு பணிகளையெல்லாம் எவ்வளவு சீக்கிரமாக முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகச் சிறு பணி ஒப்பந்தக் காரர்கள் மூலமாக முடிக்க நடவடிக்கை எடுத்து அந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மிகச் சீக்கிரமாக அந்தப் பாலவேலைகள் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண். 881—டாக்டர் கே. சமாசம் மற்றும் திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் (தென் பெண்ணை ஆற்றில்) கட்ட பல்லாண்டுகளாக திட்டமிட்டும் கட்டப்படாமல் இருப்பதன் காரணமென்ன?

(ஆ) அந்தப் பாலம் கட்ட அரசு உடனடி நடவடிக்கையினை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இப்பாலத்திற்குத் தேவைப் படும் ரூ. 50 இலட்சத்தை ஒரு மொத்தமாக ஒதுக்க நிதி நிலைமை இடம் தராத காரணத்தால், இப்பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளது.

(ஆ) நிதி நிலைமை மேம்படும் சமயம் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள அரசு ஆவன செய்யும்.

1981 ஏப்ரல் 25]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டத்திலே இருக்கும் அந்த அரசம்பட்டி-பண்ணந்தூர் பாலம் 1947 ஆம் ஆண்டிலேயிருந்து பொதுமக்கள் மத்தியிலேயும், அரசியல் வல்லுநர்களிடத்திலேயும் அடிபட்டு அடிபட்டு அது அடிபட்டே போய்விட்டது. இந்த நிலையில் மீண்டும் அதனைச் சீர்படுத்தும் வகையில் செய்தால் அங்கேயிருக்கின்ற மக்கள் ஏழு மைல், பத்து மைல் அளவிற்குச் சுற்றிவராமல் இரண்டு பர்லாங் தூரத்திற்குள்ளேயே அடுத்த நகரங்களைப் பார்க்கின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, தென்பெண்ணை ஆற்றில் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நிதி நிலைமை சரியானவுடன் கண்டிப்பாக அரசு முன்வரும்.

அரூர் நகரிலுள்ள அரசு மருத்துவமனை

*வினா எண். 882—திரு. சி. சபாபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் அரூர் நகரில் தற்பொழுது உள்ள மருத்துவ மனையை மாற்றி புதிய மருத்துவமனை கட்டுவதற்கு அரசிடம் திட்ட முள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இந்த மருத்துவமனைக்கு ரூ. 10.63 லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டமாகக் கருதப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, தருமபுரி மாவட்டம் அரூர் நகரில் இருக்கும் அந்த மருத்துவமனையை மாற்றியமைத்துப் புதிய மருத்துவமனை கட்டுவதற்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே திட்டம் சொல்லப்பட்டு, ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும்கூட பரிந்துரை செய்யப்பட்டு, கட்டுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும்கூட இன்றையதினம் அரசு 1981-82 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டமாக கருதப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருப்பது குறித்து என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.